பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 12 2025** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வேலூர் வருகிறார்.

**2.** பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருதான "The Great Honour Nishan of Ethiopia" விருது வழங்கப்பட்டுள்ளது.

**3.** தமிழகத்தில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

**4.** தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

**5.** இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒருநாள் பயணமாக இன்று வேலூர் வருகிறார்.

வேலூரை அடுத்த ஸ்ரீபுரத்தில் உள்ள தங்கக் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள தியான மண்டபத்தை திறந்து வைக்கும் அவர், கோவில் வளாகத்தில் மரக்கன்றையும் நடுகிறார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

தமிழகப் பயணத்தை முடித்துக்கொண்டு திருப்பதி செல்லும் குடியரசுத்தலைவர், பின்னர் ஹைதராபாதில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருதான "The Great Honour Nishan of Ethiopia" விருது வழங்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் தலைநகர் **Addis Ababa**-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எத்தியோப்பிய பிரதமர் டாக்டர் **Abiy Ahmed Ali** இந்த விருதை வழங்கினார்.

இந்தியா-எத்தியோப்பியா இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதில் பிரதமரின் பங்களிப்பை பாராட்டியும், அவரது தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமைப் பண்பு காரணமாக உலகளாவிய தலைவராக உருவெடுத்திருப்பதை அங்கீகரிக்கும் வகையிலும் இந்த விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, உலகின் மிகப் பழமையான நாகரிங்களைக் கொண்ட நாடான எத்தியோப்பியா வழங்கியுள்ள இந்த விருதை மிகுந்த பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவதாக கூறினார்.

இந்த விருதை 140 கோடி இந்திய மக்களுக்கு அர்ப்பணிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஜோர்டான் பயணத்தை முடித்துக் கொண்டு எத்தியோப்பிய தலைநகர் **Addis Ababa** சென்றடைந்த பிரதமரை, விமான நிலையத்தில், அந்நாட்டு பிரதமர் நேரில் வரவேற்றார்.

அப்போது இந்திப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

**(Sound Byte - பாடல் - 10 Sec)**

அதனைத் தொடர்ந்து, எத்தியோப்பிய அதிபர் மாளிகையில், பாரம்பரிய முறையிலான அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் இரு நாட்டுப் பிரதமர்கள் முன்னிலையில் இந்தியா - எத்தியோப்பியா இடையே மூன்று ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையங்களின் மேம்பாட்டிற்காக, கடந்த ஐந்தாண்டுகளில், **326** கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், தமிழகத்தில் உள்ள **31** மாவட்டங்களில் வேளாண் அறிவியல் மையங்கள் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின், நூறு சதவீத நிதியுதவியுடன் செயல்பட்டு வரும் இந்த மையங்கள் மூலம், வேளாண் துறை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த மையங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில், அதிக மகசூல் தரக்கூடிய தரமான விதைகள் மற்றும் தோட்டப்பயிர் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுவதாகவும் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மாநில அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று தமிழக விளையாட்டு மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தலா **3** கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறு விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு நிதியுதவி மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முன்னணி வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அனைத்து மாவட்டங்களிலும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தொடங்கப்படும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் முன்னாள் படை வீரர்களுடன் கலந்துரையாடிய அவர், மாநிலத்தில் ஆளும் திமுக அரசு, புதிதாக கேந்திரிய வித்யாலயா பள்ளிகளைத் தொடங்குவதற்கு தடையாக உள்ளது என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசு மத்திய அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசு தமிழக திட்டங்களுக்கு சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கியிருப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நாளை மறுநாள் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் முகவரியில் இல்லாத வாக்காளர்களின் விவரங்களை அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் இணையதளங்கள் வாயிலாக தெரிந்துகொள்ளலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீக்கப்பட உள்ள வாக்காளர்களின் விவரங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதில் ஏதேனும் பிழைகள் இருப்பின், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பே அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி அர்ச்சனா பட்நாயக் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பிரதமரின் ஜன்மன் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 225 வீடகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Suresh - 44 Sec)**

<<<<>>>>

தெற்கு ரயில்வேயில் உள்ள ரயில் பாதைகளை மின்மயமாக்கும் பணி முழுமையடையும் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செயதிக்குறிப்பில், நேற்று முன்தினம் வரை 97 சதவீத அளவிற்கு மின்மயமாக்கல் பணி முடிவடைந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 5 ஆயிரத்து 116 கிலோ மீட்டர் ரயில் பாதையில் 4 ஆயிரத்து 995 கிலோ மீட்டர் அளவிற்கு மின்மயமாக்கப்பட்டு இருப்பதாகவும், திருத்துறைப்பூண்டி - பட்டுக்கோட்டை - காரைக்குடி மற்றும் சின்னசேலம் - போர்ப்படகுறிச்சி இடையிலான மின்மயமாக்கல்

பணி 2026-27ஆம் ஆண்டில் நிறைவடையும் என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேற்று ஒருநாளில் மட்டும் 3 ஆயிரம் ஆஃகானிஸ்தான் அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

-------------

ஆஃப்கனிஸ்தான் சுகாதாரத்துறை அமைச்சர் மௌலவி நூர் ஜலால் ஜலாலி அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

-------------

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இளம் வாக்காளர்களை சேர்ப்பது குறித்து ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், கல்லூரி முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

-------------

மாநில அளவிலான சிறுபான்மையினர் தினவிழா திருப்பத்தூர் தூய நெஞ்சக கல்லூரி வளாகத்தில் நாளை நடைபெறுவதாக ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

-------------

தருமபுரி மாவட்டம் சிவாடியில் இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் சார்பில் அவசர நிலை குறித்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

-------------

தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் 10 நாள் லட்சதீப பெருவிழா நேற்று தொடங்கியது.

-------------

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளியன்று நடைபெறும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பிய கிறித்தவர்கள் அரசின் மானிய உதவி பெற விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு. தினேஷ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

**தூத்துக்குடி மாவட்டம் தேரிக்குடியிருப்பு கற்குவேல் அய்யனார் கோவில் கள்ளர் வெட்டுத் திருவிழாவில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.**

**-------------**

***விளையாட்டுச் செய்திகள்***

**இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று நடைபெறுகிறது.**

**இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.**

**5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-1 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.**

**----------------**

**அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ட்வெண்ட்டி ட்வெண்ட்டி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான கோப்பை, ஆசியாவில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.**

**<<<<The End>>>>**